கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 22.07.2024 அ.வ.எண். 246/2017 வா.சா.1. ஆனந்தகுமார், த/பெ, நம்பிராஜ்

<u>**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

1. தாவா வழக்கில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் ஆதியில் எனது தாத்தா முத்துச்சாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். முத்துச்சாமி கவுண்டருக்கு 3 ஆண் மக்கள், 3 பெண் மக்கள் என்றால் சரிதான். முத்துலட்சுமி, ராஜேஸ்வரி, பூவாத்தாள் ஆகியோர் பெண் மக்கள், முத்துக்குமாரசாமி, தனராஜ், நம்பிராஜ் ஆகியோர் ஆண்மக்கள் என்றால் சரிதான், நான் நம்பிராஜன் மகன் என்றால்சரிதான். 08.10.1993 ல் எனது தாத்தா முத்துச்சாமி கவுண்டரும்,அவரது ஆண் மக்கள் மூவரும் சேர்ந்து பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப் பிரிவினையில் தாவா சொத்து எனது தாத்தா முத்துச்சாமி கவுண்டருக்கு பாகப்படி வந்த சொத்து என்றால் சரிதான்.

2. எனது தாத்தா அவரது சொத்துக்களை பொறுத்து எந்த ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான், எனது தாத்தா காலம் ஆனது 11.11.2012 என்றால் சரிதான். எனது தாத்தா காலம் ஆவதற்கு முன்பே எனதுதகப்பனார் நம்பிராஜன் 17.05.2011 ம் தேதி காலம் ஆகிவிட்டார் என்றால் சரிதான்.

3. எனது தாத்தா முத்துசாமி கவுண்டர் உயிரோடு இருந்த காலத்தில் 15.10.2010 ல் எனது அப்பா நம்பிராஜனுக்கு ஒருஉயில் எழுதி வைத்ததாக நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான், அந்த உயில் சாசனம் அமுலுக்கு வருவதற்கு முன்பே எனது தகப்பனார் காலம் ஆகிவிட்டார் என்றால் சரிதான் அதனால் அந்த உயில் சட்டப்படி செல்லாது என்றால் சரிதான்,.

4. மேற்படி உயிலைத் தவிர எனது தாத்தா இந்த தாவா சொத்துக்களை பொறுத்து வேறு எந்த ஆவணமும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா முத்துச்சாமி கவுண்டர் அவரது சொத்துக்களை பொறுத்து ஆவணம் எதுவும் ஏற்படுத்தாததால் முத்துச்சாமி கவுண்டரின்

(ஒப்பம்)/- ஆர். சுஜாதா

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

சொத்துக்கள் அவரது வாரிசுகள் அனைவருக்கும் தான் வரும் என்றால் சரிதான். ஆனால் இறப்பதற்கு 2 மாதங்களுக்கு முன்பு எங்களது குடும்பத்திடம் தாவா சொத்துக்களை நாங்களே அனுபவித்து பராமரித்து கொள்ளும்படி சொன்னார், அவ்வாறு சொன்னதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . நான் அவ்வாறு சொல்வது பொய் என்றும், வழக்கிற்காக எனது தாத்தா 2 மாதங்களுக்கு முன்பு சொன்னதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

5. தாவா வழக்கில் பிரதிவாதிகளாக சேர்த்துள்ள அனைவரும் எனது தாத்தா முத்துசாமி கவுண்டரின் வாரிசுகள் என்றால் சரிதான். எனது தாத்தா முத்துசாமி கவுண்டர் இறப்பதற்கு முன்பு ஆவணம் எதுவும் ஏற்படுத்தாததால் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் வாதி, பிரதிவாதிகளுக்கு சமமாக சேர வேண்டும் என்றால் சரிதான். ஆனால் நாங்கள் அனுபவித்து கொண்டு இருக்கிறோம். நான் அவ்வாறு சொல்வது பொய் என்றால் சரியல்ல, தாவா சொத்துக்கள் வாதி, பிரதிவாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான், எனது தாத்தா முத்துசாமி கவுணடர் தாவா சொத்துக்களின் சுவாதினத்தை எங்களிடம் ஒப்படைத்து விட்டார் என்பதை நிரூபிக்க எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்., எங்களிடம் சுவாதினம் ஒப்படைக்கவில்லை என்றும், அதனால் தான் எங்களால் ஆவணம் எதுவும் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல, மற்ற கூட்டு பாத்தியஸ்தர்களுக்கு தெரியாமல் வாதிகளான எங்கள் பெயரில் பட்டா மாறுதல் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. பட்டா மாறுதல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு எவ்வித அறிவிப்பும் நாங்களோ அல்லது வருவாய்த்துறையில் இருந்தோ அனுப்பவில்லை என்றால் சரிதான், எந்த அடிப்படையில் பட்டா மாற்றினோம் என்றால் அனுபவ பாத்தியத்தின் அடிப்படையில் மாற்றினோம். 12 வருடங்களாக எங்களது அனுபவத்தில் தாவா சொத்து இருந்து வருகிறது என்றால் சரிதான்.

(ஒப்பம்)/- ஆர்.சுஜாதா
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

6. 12 வருடங்களாக எங்களது அனுபவத்தில் தாவா சொத்து இருந்து வருகிறது என்பதை நிரூபிக்க அடங்கல் போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எந்த வருடத்தில் இருந்து 12 வருடம் கணக்கு என்றால் எனது தாத்தா இறந்ததற்கு 2 மாதங்களுக்கு முன்பு இருந்து ஆகும். எனது தாத்தா இறந்தது 2012 ம் ஆண்டு என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்தது 2017 என்றால் சரிதான். தாவா தாக்கல் செய்யும் போது 5 வருடம் தான் சுவாதினத்தில் இருந்ததாக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 12 வருடமாக நாங்கள் சுவாதினத்தில் இருந்த விவரத்தை எனது தாவாவில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

7. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் பத்தி 12 ல் முத்துசாமி கவுண்டர் காலம் ஆன பின்பு மேற்படி முத்துசாமி கவுண்டரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் தாவா சொத்துகள் முழுவதும் எங்களுடன் பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்டு அனைவரும் கூட்டு பாத்தியஸ்தர்கள் என்பதின் அடிப்படையில் பிரதிவாதிகள் எங்களுடன் கூட்டு சுவாதினத்தில் இருந்து வருகிறார்கள் என்று கூறி உள்ளேன் என்றால் சரிதான், ஒரு கூட்டு பாத்தியஸ்தர் மற்ற கூட்டு பாத்தியஸ்தர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துககட்டளை கேட்க முடியாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவாவில் விளம்புகை பரிகாரம் கூறி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கேட்கக்கூடிய பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் இந்த தாவா தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும் சரியல்ல.,

(ஒப்பம்)/- ஆர். சுஜாதா

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி